# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

## <u>O.S.No.35/2019</u>

**P**W1 ஜெகநாதன் நாள் 15.03.2023

**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு எழுதபடிக்கத் தெரியும். பாகம் கேட்டு தாவா தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அறிவிப்பு அனுப்பியதற்கு நான் தான் வழக்கறிஞருக்கு தகவல் சொன்னேன். வழக்கு தாக்கல் செய்யவும் நான் தான் விவரத்தை சொன்னேன். 1–ம் பிரதிவாதி தங்கையா என் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். என் அப்பாவுக்கு இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள். அவர்களுடைய பெயர்கள் நான் , தங்கையா, காந்திமதி, ராஜாத்தி ஆவார். என் அப்பாவின் அப்பா பெயர் மொட்டையன். மொட்டையன் என்பவருக்கு 4 மகன்கள். காளியப்பன், பெருமாள், கண்டாக்கு மற்றும் எனது அப்பா செல்லமுத்து ஆவார். எனது அம்மாவின் பெயர் மாரியாயி. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் மாரியம்மாள் என்று குறிப்பிட்டிருந்தால் அது தவறு. எனது தந்தை இறந்த பிறகு எங்களது பூர்வீக கூட்டு குடும்ப சொத்துக்கள் அனைத்தையும் என் அம்மா, என் தம்பி, நான் ஆகியோர் 31.05.1996 ல் பாகம் பிரித்துக்கொண்டு பாகப்பத்திரம் பதிவுசெய்யட்டுள்ளது என்றால் சரிதான். அது வா.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த பாகப்பத்திரத்தில் இனி நமக்குள் பிரிபட வேண்டிய அசையா சொத்துக்கள் இனி எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாகப்பத்திரத்தில் பி செடியூல் எனது பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண் 553/4 பி, 553/6 பி எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சர்வே எண் ஞாபகம் இல்லை. பத்திரத்தில் கண்டுள்ள சர்வே எண் 553 ல் உண்ணாமலை என்பவருக்கு 1 ஏக்கர் 2 செண்ட் உள்ளது என்றால் சரிதான். உண்ணாமலைக்கு பெரியசாமி, செல்லன் என்ற இரண்டு மகன்கள் இருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. உண்ணாமலையின் கணவர் பெயர் செல்லமுத்து என்ற விவரமும் எனக்கு தெரியாது. என் அப்பா கிரையம் வாங்கி ஆளுக்கு பாதி என்று சொன்னார். தாவா சொத்து என்னுடைய பூர்வீக சொத்து அல்ல என்றும், அது உண்ணாமலை உடைய சொத்து என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து எங்களுடைய பூர்வீக சொத்தாக இருந்தால் அதை 1996 ல் ஏற்பட்ட பாகப்பத்திரத்திலேயே காட்டியிருப்போம் என்றும், அது உண்ணாமலை உடைய சொத்து என்பதால் தான் காட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து உண்ணாமலை மகன்களிடம் இருந்து 1986 ல் என் தம்பி தங்கையா கிரையம்

வாங்கியுள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பாகபத்திரம் எழுதும்போதே தாவா சொத்தை அவருடைய பாகத்தில் சேர்த்துக்கொள்ள கேட்டாரா என்றால் அவ்வாறு கேட்கவில்லை. தாவா சொத்து என் அப்பா தான் வாங்கியுள்ளார். என் அப்பா தான் கிரையம் வாங்கியுள்ளார் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து எங்களுடைய பூர்வீக சொத்து தான் என்பதற்கான பட்டா, சிட்டா, அடங்கல் உள்ளதா என்றால் அதற்கான பத்திரம் இருந்தது. அதை என் தம்பி எடுத்துக்கிட்டு போய்விட்டார். பத்திரத்தை எடுத்து போக வேண்டிய அவசியம் தங்கையாவுக்கு இல்லை என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது முதன்மை வாக்குமூலத்தின் 2ம் பக்கத்தில் என் தாயார் பாகத்திற்கு வழக்கு சொத்து ஒதுக்குவதாக பேசி முடிக்கப்பட்டதாக சொல்லியுள்ளது உண்மைதான். யார் யாரை வைத்து பேசப்பட்டது, எங்கு வைத்து பேசப்பட்டது , எப்போது பேசப்பட்டது என்ற விவரம் எனது வழக்குரையிலோ, வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து என்னுடைய பூர்வீக சொத்தாக இருந்தால் பாகபத்திரத்தில் விடுப்பட்டதை அறிந்த உடன் பாகபத்திரத்தை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுத்திருப்போம் என்றும், அது பூர்வீக சொத்து இல்லாததால் தான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து என் அப்பா தனியாக வாங்கிய சொத்து. அதனால் பாகபத்திரத்தில் சேர்க்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ. 8 ஆவணத்தில் கண்ட கிரையசொத்திற்கும் வழக்குச்சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், குழப்புவதற்காக இந்த ஆவணத்தை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து என்னுடைய பூர்வீக சொத்து என்று தாவா சொத்துக்கான பட்டாவில் என் பெயரை சேர்க்க சொல்லி நான் மனு எதுவும் கொடுக்கவில்லை. தாவா சொத்து என்னுடைய பூர்வீக சொத்து இல்லை என்பதால் தான் எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து 1-ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்து 1-ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதால் அவர் யாருக்கு வேண்டுமானாலும் எழுதிக்கொடுக்கலாம் என்றால் சரியல்ல. நான் எனது வழக்குரையிலும், முதன்மை வாக்குமூலத்திலும் கூறுவது போல தாவா சொத்து எனது தாயார் பாகத்திற்கு பேசி ஒதுக்கப்பட்டு அவர் ஆயுளுக்கு பிறகு எனக்கு பாத்தியப்பட்டது என்று கேட்க வேண்டுமென்றால், நான் விளம்புகை பரிகாரமும், சுவாதீனம் பரிகாரம் தான் கேட்க வேண்டுமென்றும், பாகப்பிரிவினை கேட்க முடியாது என்றும் , எனவே தாவா தள்ளுபடி ஆக

வேண்டுமென்றால் சரியல்ல. நான் உண்மையான தகவலை சொல்லி தூய்மையான கரங்களுடன் நீதிமன்றத்தில் அனுகாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி ஆகவேண்டுமென்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.